31st March 1964]

(எ) அதை அந்தக் கம்பெனி பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nine companies.

(*b*) Yes.

(*c*) Yes.

(*d*) No. The vehicles are plying from September 1963.

திரு. மு. கருணாநிதி : இந்த டாக்சிகளுக்கு லைசென்ஸ் கொடுக்கிற வகையில், ஒரு கம்பெனிக்கு அதிகபட்சம் எத்தனை டாக்சிகளுக்கு லைசன்ஸ் வழங்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நாம் வகுத்திருக்கிற கொள்கைப்படி எத்தனை கேட்டாலும் கொடுக்கிறோம்.

திரு. ஆ. துரையரசன் : இந்த தனியார் துறையில் ஓடுகின்ற டாக்சிகளை படிப்படியாகக் குறைத்துவிட்டு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற டாக்சிகளை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி எண்ணம் இல்லை. கூட்டுறவுத்துறையில் அதிகமாக வந்தால், அவர்களுக்கும் வசதி அளிக்கவேண்டும் என்பதுதான் உத்தேசம்.

கோபாலபுரத்தில் காளைமாடு வதை

***470 கேள்வி—திரு. செ. சீனிவாசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் பிரச்சாரமாக சென்னை, கோபாலபுரத்தில் காளைமாட்டைக் கொம்பால் குத்தினர்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இக்குற்றம் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

செகரடேரியட் அதிகாரி தற்காலிக நீக்கம்

***471 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க செகரடேரியட் அலுவலகத்தில் உயர்தர அதிகாரி எவரேனும் வேலையினின்று நீக்கிவைக்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணமென்ன ?

(உ) அரசாங்கம் அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?